நில அரசு முடிவு

மூட முடிவு செய்துள்ளோம்.

சிறையிலிருந்து விடுதலையாகும் கைதிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் முயற்சியிலும் சிறைத்துறை ஈடுபட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 100 பெட்ரோல் பங்க்குகள் மற்றும் சிறு தொழில் ஏற்படுத்தி தருதல் ஆகியவை ஏற்படுத்தப்படும்.

அண்டை மாநிலங்களில் உள்ள கைதிகளை அடைக்க மூடப்பட்ட சிறைகளை வாடகைக்கு விடும் திட்டத்தையும் அரசுக்கு சிறைத்துறை பரிந்துரை செய்துள்ளது என்று கூறியுள்ளார்.

திருவண்ணாமலை தனியார் ஹாட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் மூலமாக மதிய உணவு வழங்கப்பட்டது.

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், மேல்நாச்சிப்பட்டு கிராமத்தில் வசித்து வரும் கூலித் தொழிலாளி ஆர்.சேகர், எஸ்.நிர்மலா ஆகியோரின் வளர்ச்சி குறைபாடுள்ள 12ம் வகுப்பு படித்து முடித்துள்ள மகன் எஸ்.சபரி (வயது 18) என்பவருக்கு மேல்படிப்பு படிக்க உதவிடுமாறு மாவட்ட கலெக்டரிடம் 29.1.2018 அன்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மனு அளித்தனர். மாணவர் சபரி கண்ணக்குருக்கை அரசு மேல்நிலைப் பள்ளியில் 12ம் வகுப்பு படித்து கடந்த ஆண்டு நடைபெற்ற அரசு பொதுத் உத்திரவும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வாய்ப்பினை எனக்கு வழங்கிய உள்ள தமிழ்நாடு அரசுக்கும், மாவட்ட கலெக்டருக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பொ.இரத்தினசாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் க.லோகநாயகி, திட்ட அலுவலர் மகளிர் திட்டம் ப.ஜெயசுதா, ஒருங்கணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் க.தமிழரசி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜான்சி மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பெரு நாட்டில் நிலநடுக்கம்

லிமா, பிப். 6–

தெற்கு அமெரிக்க நாடான பெருவில் உள்ள அகாரி நகரின் தென்மேற்கு பகுதியில் நேற்றிரவு ரிக்டர் அளவிகோலில் 4.7 அலகுகளாக நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அகாரி நகரில் இருந்து தென்மேற்கு திசையில் சுமார் 57 கிலோமீட்டர் தொலைவிலும், பூமிக்கடியில் சுமார் பத்து கிலோமீட்டர் ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து உடனடி தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. ஆனால் குறைந்த அளவிலான பாதிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கூறியுள்ளது.

அக்னி ஏவுகணை சோதனை வெற்றி



பலாசோர், பிப். 6–

ஒரிசா மாநிலம் அருகே வங்க கடல் பகுதியில் உள்ள அப்துல் கலாம் தீவில் அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் அக்னி1 (ஏ) ஏவுகணையை செலுத்தி இன்று காலை 8.30 மணிக்கு சோதனை நடத்தப்பட்டது.

15 மீட்டர் உயரமும், 12 டன் எடையும் கொண்ட இந்த குறைந்த தூர இலக்கை தாக்கும் ஏவுகணை சுமார் 700 கிலோ மீட்டர் தூரம் சென்று தாக்கவல்லது.

இந்த ஏவுகணை இலக்கை துல்லியமாக தாக்கும் வகையில் சிறப்பான வழிகாட்டுதல் அமைப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 1 டன் அணு ஆயுதங்களை தாங்கி சென்று குறிப்பிட்ட இலக்கை தாக்கக்கூடிய வகையில் இந்த ஏவுகணையை மேம்படுத்தி உள்ளனர்.

இந்த சோதனையை இந்திய ராணுவம் இன்று வெற்றிகரமாக நடத்தி முடித்தது. இது 700 கி.மீ. தூரத்தை தாக்கும் பிரிவில் 18வது ஏவுகணையாகும்.

எம்ஆர்எப் லிமிடெட்

CIN: L25111TN1960PLC004306
பதிவு அலுவலகம்: 114, கிரீம்ஸ் ரோடு, சென்னை–600 006.
Tel.:044-28292777; Fax.: 91-44-28295087
Email : mrfshare@mrfmail.com Website :www.mrftyres.com

அறிவிப்பு

31 மார்ச், 2018ல் முடியும் நிதி ஆண்டிற்கு ஒரு சமபங்கிற்கு ரூ.3/– இரண்டாவது இடைக்கால டிவிடெண்ட் வழங்குவதற்கு 13 பிப்ரவரி 2018ஐ பதிவுத் தேதியாக 1 பிப்ரவரி 2018ல் நடைபெற்ற இயக்குனர்கள் குழு கூட்டம் நிர்ணயித்துள்ளது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

எம்ஆர்எப் லிமிடெட்டுக்காக
ரவி மன்னத்
கம்பெனி செயலாளர்

இடம்: சென்னை
தேதி : 5 பிப்ரவரி, 2018

மெகாசாப்ட் லிமிடெட்

CIN: L72200TN1999PLC042730
MEGASOFT
பதிவு அலுவலகம்: 85, கச்சேரி சாலை, மயிலாப்பூர்,
சென்னை–600004. தமிழ்நாடு, இந்தியா
Tel: +91 (44) 2461 6768, Fax: +91 (44) 2461 7810
e–mail: investors@megasoft.com Website: www.megasoft.com

அறிவிப்பு

இதர அலுவல்களுக்கு இடையே, 31 டிசம்பர், 2017ல் முடிந்த காலாண்டுக்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை, பிப்ரவரி 12, 2018 அன்று நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் இணையதளம் www.megasoft.com மற்றும் ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் www.bseindia.com and www.nseindia.comல் இந்த தகவல் உள்ளது.

மெகாசாப்ட் லிமிடெட்டுக்காக
(ஜிவி குமார்)
நிர்வாக இயக்குனர் & ஒப்புதல் அதிகாரி

தேதி : 06.02.2018
இடம் : ஐதராபாத்

அரும் சார்ப் சிஸ்டம்ஸ் லிமிடெட்

aurumsoft

L32200TN1994PLC028958
பதிவு அலுவலகம்: சிட்டி சென்டர் பிளாசா, 3வது தளம் அறை எண். 7148, அண்ணா சாலை, சென்னை–600 002.
Tel: (91)-44-42187785/94; Email: arun@aurumsoftsystems.com,
Website: www.aurumsoftsystems.com

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ்சு போர்ட் ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) கட்டுப்பாடுகள் 2015ன் கட்டுப்பாடு 29 மற்றும் இதர பொருந்தக்கூடிய கட்டுப்பாடுகளின்படி, கீழ்கண்டவற்றை பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டம் 14 பிப்ரவரி, 2018, புதன்கிழமை அன்று மாலை 4.00 மணிக்கு கம்பெனியின் கார்ப்பரேட் அலுவலகம்: 15பி/1, அறை எண். 203–204, உக்கர்சைன் மார்க்கெட், அசோக் நகர், திலக் நகர், புதுடெல்லி – 110,018–ல் நடைபெற உள்ளது.

- 31 டிசம்பர், 2017–ல் முடிந்த காலாண்டிற்கான கம்பெனியின் தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்.
- தணிக்கையாகாத நிதிநிலை முடிவுகள் விஷயத்தில் கம்பெனியின் தணிக்கையாளர்களான மெசர்ஸ் ஜிஸ்எஸ்வி அண்ட் அசோசியேட்ஸ், சார்ட்டர்ட் அக்கவுண்டண்ட்ஸ் அவர்களிடமிருந்து மறுவரையறுக்கப்பட்ட ஆய்வறிக்கை பெறுதல்.
- திருமதி. ஜெக்ஜித் கவுர் கல்ரா அவர்களை செயல் இயக்குனர் அல்லாமல் நியமித்தல்
- திரு. அமர்ஜித் சிங் கல்ரா அவர்களை செயல் இயக்குனர் பொறுப்பிலிருந்து செயல் இயக்குனர் அல்லாதவராக மாற்றுதல்.
- கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 203–ன் கீழ் திரு. விஜய் ஜோஷி அவர்களை கம்பெனியின் தலைமை நிதி அதிகாரியாக (CFO) நியமித்தல்.
- இதர விஷயங்கள் இயக்குனர் குழுவால் அங்கீகரிக்கப்படுதல்.

மேலும், குழு கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக அன்றைய தினமே இந்தக் கூட்டத்தில் தணிக்கையாளர்கள் குழு நிதிநிலை முடிவுகள் குறித்து விவாதித்து மறுபரிசீலனை செய்யும்.

மேலும், இதர பொருந்தக்கூடிய செபி (உள் வர்த்தகத்தை தடை செய்வது) கட்டுப்பாடுகள் 2015–ன் கீழ் சம பங்குகள் குறித்து கையளும் 'வர்த்தக சாளரம்' 6 பிப்ரவரி, 2018 செவ்வாய்கிழமை முதல் 16 பிப்ரவரி 2018 (இரண்டு நாட்களும் உட்பட) வரை தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை ஸ்டாக் எக்சேஞ்சில் சமர்ப்பிக்கப்பட்ட 48 மணி நேரம் வரை மூடப்பட்டிருக்கும். இது குறித்து கம்பெனியின் இயக்குனர், கேமி மற்றும் ஊழியர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குனர்கள் குழுவின் ஆணைப்படி
அரும் சார்ப் சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/– சுரிந்தர் கவுர் கல்ரா
நிர்வாக இயக்குனர்

தேதி: 5 பிப்ரவரி, 2018
இடம்: சென்னை